பக்கங்கள் 22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை 26.10.2025 | அதிர்வு 87

## 'மொந்தா' புயலால் பாதிப்பு இல்லை!

**வடக்கு, கிழக்கில் மழை தொடரும்**

மத்திய வங்காள விரிகுடாவில் தோன்றிய தாழமுக்கம் தற்போது ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மேற்கு வடமேற்கு திசை நோக்கி 02



# எந்த நேரத்தில் எவரும் சுட்டுக் கொல்லப்படலாம்

## இலங்கையின் நிலைமை இப்படி வந்துள்ளது என்று சஜித் எச்சரிக்கை

"இலங்கையில்எந்தச்சந்தர்ப்பத்தில் எங்கு துப்பாக்கிச்சூடு நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசிடம் முறையான வேலைத்திட்டங்கள் எவையும் இல்லை."

-இவ்வாறுஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டம், இறக்குவானைத் தேர்தல் தொகுதியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் 02

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா**

# வடக்கில் நான்கு மாவட்டங்களில் இன்று 13 மணி நேரம் மின் தடை

வடக்கு மாகாணத்தில் மன்னார் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை 13 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் 220 கே.வி. மின் பரிமாற்ற வடத்தை 02






தன்னைப் பற்றி மக்கள் எப்போதும் பேச வேண்டும் என்பதற்காக ஏதாவது குசும்பு பண்ணிக் கொண்டிருப்பார் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனா.

அது அவரின் திறமையா அல்லது குறைபாடா என்பதை அவருக்கு வாக்களித்தவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

இப்போது செங்கண் நாடுகளுக்கு வந்துள்ள அவர் தினசரி விடும் காணொலிகள் பலருக்கும் செம பொழுதுபோக்கு விடயம்.

பல இடங்களில் நெருக்கடிகளையும் சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ள அவர், அதனால் இந்த நாடுகளில் தனது நகர்வை கவனமாகத்தான் முன்னெடுக்கிறார். 03

# வரும் மாகாண சபைத் தேர்தலில் முன்னாள் எம்.பிக்கள் பலர் போட்டி

அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலில் 30 இற்கும் மேற்பட்ட முன்னாள் எம்.பிக்கள் போட்டியிடவுள்ளனர் என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தேசிய மக்கள் சக்தி அலையைச் சமாளித்து, தமது கட்சிகளுக்குரிய வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்ளும் நோக்கிலும், மக்கள் மத்தியில் தமக்குள்ள ஆதரவை நாடி பிடித்துப் பார்க்கும் வகையிலுமே முன்னாள் எம்.பிக்கள் இவ்வாறு களமிறங்கவுள்ளனர்.

நவீன் திஸாநாயக்க, உதய கம்மன்பில, ஹிருணிகா பிரேமசந்திர, முஷாரப், மருதபாண்டி ராமேஸ்வரன், யோகேஸ்வரன் உட்பட மேலும் பல முன்னாள் எம்.பிக்களே போட்டியிடுவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் வடக்கிலுள்ள முன்னாள் எம்.பிக்களும் போட்டியிடவுள்ளனர். குறிப்பாக கட்சி தீர்மானிக்குமானால் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காகச் சில எம்.பிக்கள் பதவி விலகவுள்ளனர். மலையகத்திலுள்ள முக்கிய சில அரசியல் பிரமுகர்களும் தேர்தலில் குதிக்கவுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கில் நான்கு...

மாற்றியமைப்பதற்கான வேலைகளுக்காகவே இன்று காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை மின் துண்டிக்கப்படுவதால், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும்.

வேலைகள் பூர்த்தியாகியவுடன் மின் இணைப்பானது உடனடியாக மீள வழங்கப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

### எந்த நேரத்தில்...

குறிப்பிடுகையில்,

“மக்களை வாழ வைப்பதுதான் ஓர் அரசின் கொள்கையாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நாட்டில் கொலைக் கலாச்சாரம் தலைதூக்கியுள்ளது. இவ்வாண்டில் மாத்திரம் அதிக எண்ணிக்கையிலான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதால், உயிரிழப்புகளும் காயங்களுக்குள்ளான சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

பொதுமக்கள் சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பிரதேச சபை தவிசாளர் ஒருவர் மீது அவரது அலுவலகத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் சாதாரண பிரஜைகளின் உயிருக்கு எவ்வாறு உத்தரவாதமளிக்க முடியும்?

இன்று சமூகத்தில் கொலைகளும் திட்டமிட்ட குற்றச் செயல்களும் வெகுவாகவும் சர்வசாதாரணமாகவும் இடம்பெற்று வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசிடம் சரியான வேலைத்திட்டமொன்று இல்லை. இந்த அரசின் பலவீனம் காரணமாக, கொலைகாரர்களுக்கும் கொள்ளையர்களுக்கும் குற்றங்களைச் செய்வதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தான் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் வெலிகம பிரதேச சபை தவிசாளர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், எனவே தனக்கு பாதுகாப்பு வழங்குமாறும் பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸார் அதற்குரிய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இன்று நாட்டில் எந்தச் சந்தர்ப்பத்தில் எங்கு துப்பாக்கிச்சூடு நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்களையும், கொலைகாரர்களையும் கைது செய்து, குற்றச் செயல்களை இல்லாதொழிக்க வேண்டும். அற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

அவர்களுக்குச் சட்டத்தின் கீழ் அதிகபட்ச தண்டனை வழங்கும் நடவடிக்கைக்கு நாமும் எமது ஆதரவைத் தருவோம். இந்தக் கொலைக் கலாச்சாரத்தை முன்னிறுத்தி, எதிர்க்கட்சியைக் கட்டுப்படுத்த வந்தால், அதற்கு நாம் இடமளியோம்.

இன்று நாட்டில் ஜனநாயகமோ – அமைதியோ இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. நாட்டை அழிக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

நீதி, நியாயம், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் எமது உட்சபட்ச ஒத்துழைப்பைத் தருவோம். மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு முறையான பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்குமாறும், 220 இலட்சம் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.” – என்றார்.

### ‘மொந்தா’ புயலால்...

நகர்ந்து வருகின்றது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“தற்போது முல்லைத்தீவுக்கு கிழக்காக 749 கி.மீ. தொலைவில் காணப்படும் இந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் நாளை 27ஆம் திகதி புயலாக மாற்றம் பெறும். இது வடமேற்கு மேற்கு திசையில் நகர்ந்து மறுதினம் 28 ஆம் திகதி இரவு அல்லது 29 ஆம் திகதி காலை இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் காக்கிநாடாவில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு ‘மொந்தா’ எனப் பெயரிடப்படும். இந்தப் பெயரைத் தாய்லாந்து நாடு வழங்கியுள்ளது. 2025/2026 வடகீழ்ப் பருவக்காற்று காலத்தில் உருவாகவுள்ள முதலாவது புயலாக இது அமையும்.

இந்தப் புயலினால் இலங்கையின் எந்தவொரு பகுதிக்கும் எந்தவொரு பாதிப்பும் கிடையாது. எனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும், கிழக்கு கரையோரப் பகுதிகளில் குறிப்பாக வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை கரையோரப் பகுதிகளில் சற்று கனமான மழைக்கு வாய்ப்புள்ளது. இடி மின்னல் நிகழ்வுகளும் அவ்வப்போது இடம்பெறும்.

அதேவேளை நாளை 27 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதி கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இந்தப் புயலால் அடுத்த சில நாட்களில் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு நெருக்கடி நிலை உருவாகும். அதாவது எங்கள் பகுதி வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதன் முழுவதையும் இந்தப் புயல் உள்ளீர்த்துக்கொள்ளும் என்பதனால் ஒக்டோபர் 28 ஆம் திகதி முதல் நவம்பர் 6ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காது. ஆனாலும், பருவக் காற்று காரணமாக அவ்வப்போது சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும்.” – என்றார்.

# ரணில்–சஜித் விரைவில் சந்திப்பு?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் நேரடிச் சந்திப்பை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இரு தரப்பு இணைவுக்காக இரு கட்சிகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவில் உள்ளவர்கள் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றன.



எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து பயணிப்பதற்குரிய இணக்கப்பாட்டை இரு தரப்புகளும் எட்டிய பின்னர், இரு கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வைப்பதற்குரிய முயற்சியே இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், இருவரும் இணைந்து கூட்டு செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

ஒரு கட்சிகளும் ஒரு கட்சியாக இணைவதற்கு இரு தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து, பொதுச் சின்னத்தில் – பொதுப் பட்டியலின் கீழ் தேர்தல்களைச் சந்திப்பது பற்றி தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் அவர் நோர்வேயில் தென்பட்டிருக்கிறார். அங்கு இதுவரை காலமும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வெற்றியை கொண்டாடி, தன்னை அக் கட்சியின் ஆதரவாளர் போலக் காட்டிக் கொண்ட ஒரு தமிழ்ப் பிரகிருதி அவருக்கு அல்லக்கையாக மாறி, கூட மாடத் துணைக்குச் சென்று வருகிறார் எனத் தகவல். ஒரு சிலருடன் சந்திப்பின் போது 74 வயதுடைய ஒருவர் அவரது அணியோடு முரண்பட்டு காயப்பட்டிருக்கிறார். இப்படி ஒருவர் காயப்பட்டதற்கு வைத்தியர் அர்ச்சுனா கூறும் (விளங்காது) விளக்கம், வியாக்கியானம் பற்றிய துண்டுக் காணொலிக்யை இத்துடன் இணைத்துள்ளேன். பார்த்துக் கேட்டு, புரிந்து கொள்ள முடியும் என்றால் புரிந்து கொள்ளுங்கள்.

CLICK HERE VIDEO

அதுவல்ல விடயம். செங்கண் நாடுகளில், டிராம்புகளில் 'வித்தவுட்' ரிக்கட்டுகளுடன் பயணித்து, பிடிபடாமல் இருப்பதாயின் அதற்கு தன்னுடைய செலவுகளுக்குப் பணம் தேவை என்றும் தன்னுடைய வங்கிக் கணக்குக்குப் பணம் அனுப்பும் படியும் பகிரங்கமாக காணொலி மூலம் ஆன்ரிமாரிடம் கோரிக்கை விடுக்கும் அவர், அதேசமயம் அங்கு தமது பாதுகாப்புக்கு மூன்று துப்பாக்கிகளை ஒத்த ஆயுதங்களை வாங்கி இருக்கின்றார் என்று தெரிகிறது.

இவை மிளகு, மிளகாய் போன்ற காரமான – எரிச்சலூட்டுகின்ற – மருந்துச் சன்னங்களைக் கொண்டு சுடுபவை என்றும், அவை உயிராபத்தை ஏற்படுத்தா என்றும் அர்ச்சுனா கூறுகிறார். அவற்றில் ஒன்று ரிவால்வர் பாணி அலகு என விவரிக்கப்படுகிறது. அடுத்தது பிஸ்டல் பாணி அலகு. மூன்றாவது ஒரு நீண்ட தூரம் தாக்கும் அலகு. மற்றும் அவற்றுக்குப் பயன்படுத்தும் சொற்ப எண்ணிக்கையிலான தோட்டாக்களையே தாம் வாங்கியுள்ளார் எனக் கொழும்புக்குத் தெரிவித்திருக்கின்றார் அர்ச்சுனா இராமநாதன்.

வெளிநாட்டில் இருக்கும் போது தற்காப்பு நோக்கத்திற்காகவே இந்த மூன்று துப்பாக்கிகளையும் சொற்ப எண்ணிக்கையான தோட்டாக்களையும் கடந்த 18 ஆம் திக்தி ஜேர்மனியில் தான் கொள்வனவு செய்தார் என கூறும் அர்ச்சுனா, இவற்றை கொள்வனவு செய்யும் போது இத்தகைய கருவிகளை நாட்டுக்குள் கொண்டுவர முன்னர் முன் அனுமதி பெற வேண்டும் என்ற சுங்க ஒழுங்கு முறை இருப்பது தமக்குத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டு பொலிஸ்மா அதிபருக்கு ஒரு கடிதம் ஒன்றை அன்றைய தினத்திலேயே அனுப்பி இருக்கிறார்.

அதாவது கடந்த 18 ஆம் திகதிதான் அவற்றை தாம் வாங்கினார் என அவர் கடிதத்தில் குறிப்பிடுகிறார். வாங்கும் போது முன்அனுமதி பெற்றுத்தான் அதனை நாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்ற சுங்க ஒழுங்குமுறை இருப்பதாகத் தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்று கூறும் அவர், அதே 18 ஆம் திகதி திகதியிட்டு, உரிய அனுமதிக்கு ஒழுங்கு செய்யும்படி பொலிஸ்மா அதிபரைக் கோருகின்றார். அப்படி என்றால், அன்றைய தினத்தில் அந்தத் துப்பாக்கிகளை வாங்கிய பின்னர், அவற்றை நாட்டுக்குள் எடுத்து வருவதற்கு அனுமதி தேவை என்ற புதிய தகவல் அன்றைய தினமே அவருக்குத் தெரிய வந்துவிட்டது என்பதுதான் அர்த்தம். என்ன வியாக்கியானமோ...?

அந்த ஆயுதங்களைத் தான் நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அனுமதியையும் ஒழுங்குகளையும் 20 ஆம் திகதிக்குள் (அதாவது 48 மணி நேரத்துக்குள்) செய்து தருமாறும், விமான நிலையத்தில் வைத்து அவற்றை பொலிஸார் பொறுப்பேற்று, பின்னர் தன்னிடம் சட்டபூர்வமாகக் கையளிக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கடிதம் மூலம் பொலிஸ் மா அதிபரைக் கோரியிருக்கிறார். அந்த கடிதத்தின் பிரதி என் கைக்கும் கிட்டியுள்ளது.

வெளிநாட்டில் தமது செலவுக்கு வழமையாக உதவுபவர்களிடம் (அன்ரிமாரிடம்) நிதி கோரும் அர்ச்சுனா, அதே வேளையில ஆள்களை நோக்கிச் சுட்டால் அவர்களுக்கு எரிச்சலையும் வலியையும் ஏற்படுத்தக் கூடிய துப்பாக்கிகளை (ஒன்றல்ல, மூன்று ரகத்தில்) பணம் செலவழித்து வாங்கி இருக்கிறார். ஆக, அவையும் உதவும் ஆன்ரிமாரின் உபயம் என்று கருத வேண்டியதுதான்....!

* * *

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் நீதித்துறையினரின் பங்கு முக்கியமானது.

இப்போது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, நீதி முறைமையை நீதியான முறையில் பேணுவதில் நாட்டின் நீதித்துறை உயர்ந்த மட்டத்தில் இருப்பதாக ஆளும் தேசிய மக்கள் சக்தி கருதுகிறது. இந்த நிலைமை நீடித்தால் சட்டம், நீதி, ஒழுங்கை பேணுவதை நாட்டில் நிரந்தரமாக உயர்ந்த நிலைமையில் நிலைநிறுத்தி விடலாம் என்று கருதும் ஆளும் தரப்பின் ஒரு பகுதியினர், அதை உறுதிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயது எல்லையை 65 லிருந்து 67 ஆக உயர்த்த வழி செய்தால் என்ன என்று ஆலோசிக்கின்றனர் எனத் தெரிகின்றது.

அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் இதனை ஏற்படுத்த முடியும் என சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தாராளமாக இருப்பதால் அது செய்யக் கூடிய விடயம் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை இரண்டு வருடங்களால் அதிகரிப்பது என்பது இப்போது பணியில் உள்ள நீதியரசர்களின் சேவையை மேலும் இரண்டு வருடங்கள் நீடிப்பதற்கு வழி செய்யும் விடயம் என்பது புரிந்து கொள்ளத் தக்கதுதான்.

எப்போது இந்த இந்த முயற்சியை உத்தியோகபூர்வமாக அரசு முன்னெடுத்துத் தொடங்கும் என்பது தெரியவில்லை. ஆயினும் இது அரச உள்வட்டாரங்களில் – உயர்வட்டாரங்களில் – தீவிரமாக பரிசீலிக்கப்படுவதாக தெரிகிறது.

விவகாரம் விரைவில் சந்திக்கு வரும் என்று நம்பலாம்...!

# ரணில் - சஜித் ஒன்றிணைவது மிகவும் நல்லது!

## இப்படி நாமல் கருத்து




"ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைவது நல்லது. அவ்வாறு ஒன்றிணைந்தால் அது நாட்டின் அரசியலுக்கு நல்லது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைய வேண்டும் என்பதை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதே நான் கூறி இருந்தேன். அவர்கள் ஒருமித்த கொள்கையைக் கொண்ட கட்சிகளில் இருக்கின்றனர்.

அரசியல் ரீதியில் இணைவதற்கு எவ்வித தடையும் இல்லை. அவ்வாறு இணைவது நல்லது.

இந்த இணைவானது எமக்குச் சவாலாக அமையாது. எமது கட்சியின் பயணம், எமது முகாமை சேர்ந்தவர்களுடன் தொடரும்." – என்றார்.

# சுங்கத்தின் வசமுள்ள வாகனங்களை விடுவிப்பது தொடர்பில் வர்த்தமானி





சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவிப்பது தொடர்பான புதிய நிபந்தனைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவிப்பை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

இந்த ஒழுங்குமுறை நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிமுறையின்படி, வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாடு அல்லாத வேறு ஒரு நாட்டில் சர்வதேச நாணய கடிதம் (cross-border Letter of Credit) திறக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்தால், அந்த வாகனங்களை விடுவிக்க அனுமதிக்கப்படுகிறது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாகக் கூறி கடந்த மே மாதம் முதல் சுங்கத்தால் நூற்றுக்கணக்கான வாகனங்கள் துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

ஆவணங்கள் மற்றும் பதிவு தொடர்பான குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய வாகனங்களை விடுவிக்க இறக்குமதியாளர்களுக்கு இந்த புதிய வர்த்தமானி ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

# BYD மின்சார வாகனங்களை மீளப் பெறும் அறிவிப்பு இலங்கைக்குப் பொருந்தாதென சீன நிறுவனம் தகவல்




சீன மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான BYD, தமது நிறுவனத்தால் அண்மையில் அறிவிக்கப்பட்ட உலகளாவிய, வாகனங்களை மீளபெறும் நடவடிக்கை இலங்கைக்குப் பொருந்தாது என்று தெளிவுபடுத்தியுள்ளது.

பாதுகாப்பு மற்றும் தயாரிப்புத் தரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக, சுமார் 115,000 BYD Tang மற்றும் Yuan Pro வாகனங்களைத் திரும்பப் பெறுவதாக அந்த நிறுவனம் முன்னதாக அறிவித்திருந்தது.

எனினும், இந்த மீளப் பெறும் நடவடிக்கை 2015 ஆம் ஆண்டு மார்ச் 28 முதல் 2017 ஆம் ஆண்டு ஜூலை 28 வரை உற்பத்தி செய்யப்பட்ட BYD Tang மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் பெப்ரவரி 6 முதல் 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 வரை உற்பத்தி செய்யப்பட்ட Yuan Pro வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த குறிப்பிட்ட ரகங்கள் இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தப்படவில்லை அல்லது விற்பனை செய்யப்படவில்லை என்று டீலுனு நிறுவனம் உறுதி செய்துள்ளது.

எனவே, தற்போது நாட்டில் பயன்பாட்டில் உள்ள எந்தவொரு டீலுனு ரக வாகனமும் இந்த மீள பெறும் நடவடிக்கையால் பாதிக்கப்படாது என்று உள்ளூர் இலங்கை வாடிக்கையாளர்களுக்கு அந்த நிறுவனம் உறுதியளித்துள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து BYD வாகனங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான John Keells CG Auto (Pvt) Ltd மூலம் விநியோகம், சேவை மற்றும் முழுமையான உற்பத்தியாளர் உத்தரவாதம் வழங்கப்படுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மக்கள் பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல் விசாரிக்க பொலிஸாருக்கு உத்தரவு

பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறும் மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு எவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன என்பதை ஆராயுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவர் மக்கள் பிரதிநிதியாக தெரிவாகியதன் பின்னர் அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றதா அல்லது, ஏதேனும் சட்ட விரோத குற்றச் செயல்களால் அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றதா என்பதை ஆராயும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொது மக்களின் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஒரே நாள் அதிரடி வேட்டையில் 4 ஆயிரத்து 719 பேர் சிக்கினர்!


இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 719 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 17 பேரும், சந்தேகத்தின் பேரில் 580 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 267 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 176 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 23 சாரதிகளும், கவனக் குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 21 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 635 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# மட்டு. மாவட்டத்தில் மினி சூறாவளியால் 68 வீடுகள் பாதிப்பு









**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடன் மினி சூறாவளி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வீசியதால் 68 வீடுகளின் கூரைகள் வீசி எறியப்பட்டு சேதமந்துள்ளன.

அதேவேளை, மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் சில மணி நேரம் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

இந்த அனர்த்தத்தின்போது வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

வீடுகள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தஞ்சமடை ந்துள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சி.எம். சியாட் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குறையும் திருமணங்கள்

கடந்த ஆண்டில் இலங்கையில் பதிவான திருமணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 139,290 திருமணங்கள் பதிவாகியுள்ளன. இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 08 சதவீத வீழ்ச்சியைக் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 12,066 ஜோடிகளின் திருமணங்கள் கடந்த ஆண்டில் குறைந்திருக்கின்றன.

பொருளாதார நெருக்கடி நிலவிய 2022 ஆம் ஆண்டில் கூட நாட்டில் 171,140 திருமணங்கள் நடந்துள்ளன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதாவது மூன்று ஆண்டுகளில் திருமணங்களின் எண்ணிக்கை 18 சத வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது என்பது நாட்டின் மிக முக்கிய பின்னடைவு நிலைமையாகும்.

நாட்டில் ஜனத்தொகைப் பெருக்கம் வீழ்ச்சி அடைந்து வருவது குறித்து ஏற்கனவே இந்தப் பத்தியில் சுட்டி காட்டி இருந்தோம்.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 80,945 குறைந்துள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதிவுகளின்படி, 2021 முதல் 2024 வரை இறப்புகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அதன்படி, 2020 இல் இறப்புகளின் எண்ணிக்கை 132,371 ஆகவும், 2021 இல் 163,936 ஆகவும், 2022 இல் 179,792 ஆகவும், 2023 இல் 181,239 ஆகவும், 2024 இல் 171,194 ஆகவும் இருந்துள்ளது.

இதே சமயம் இலங்கையின் சனத்தொகை குறைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையொன்றை மேற்கோள்காட்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள கடந்த வருடத்தில் சுட்டிக் காட்டியிருந்தார்.

சனத்தொகை சுமார் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரத்தால் குறைந்துள்ளது. பத்து ஆண்டுகளில் மக்கள் தொகை எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டுவது இதுவே முதல் முறை என்று அவர் தெரிவித்திருந்தார்.

இதனால் பெண்கள் தொகை எழுபதாயிரமும், ஆண்கள் தொகை எழுபத்து நாலாயிரமும் அப்போது குறைந்துள்ளன.

சனத்தொகை பெருக்க வீழ்ச்சி மற்றும் திருமணங்கள் குறைதல் ஆகியவை பல நாடுகளில் - குறிப்பாக இலங்கை மற்றும் சீனாவில் - அதிகரித்து வரும் பிரச்சினையாக உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொருளாதார சவால்கள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பது திருமணங்கள் மற்றும் குழந்தைப் பேறுக்குத் தடையாக அமைகின்றன.

திருமணங்களின் எண்ணிக்கை குறைவது என்பது திருமணமாகும் வயது அதிகரிப்பதை வெளிப்படுத்துவதாகவும் அமையும்.

சனத்தொகை வளர்ச்சி விகிதம் குறைவதால், முதியோரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கும். பொருளாதாரம் மற்றும் தொழிலாளர் சந்தையில் பல தாக்கத்தை இது ஏற்படுத்தக்கூடும்.

நாட்டின் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் ஊன்றிக் கவனித்து சரியான பரிகாரமும் தீர்வும் மாற்று ஒழுங்குகளும் காண வேண்டிய முக்கிய விடயங்களை இந்தப் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.







# இன – மத அரசியலின் மீள் எழுச்சி: இப்போது ஓர் எச்சரிக்கை மணியா?



Dr. முரளி வல்லிபுரநாதன்

இலங்கையின் சுதந்திரக் கனவு பிறந்தபோதே, சமத்துவமின்மையின் ஆழமான விதை ஊன்றப்பட்டது. 1944ஆம் ஆண்டின் சோல்பரி ஆணைக்குழு, "எந்தவொரு சமூகத்துக்கும் குறைபாடுகளையோ, கட்டுப்பாடுகளையோ விதிக்கும் சட்டங்களை இலங்கை நாடாளுமன்றம் உருவாக்கக்கூடாது" என்று தெளிவாகப் பரிந்துரைத்தது. ஆனால், இந்தப் பொன்மொழியைப் புறந்தள்ளிவிட்டு, முதல் நாடாளுமன்றமே இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமையை வேரோடு பறித்தது (1949). ஐக்கிய தேசியக் கட்சியின் டி.எஸ். சேனநாயக்காவின் இந்த அநீதி, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் பிரதிநிதிகளான வே.நடராஜா போன்றோரையும் வலுக்கட்டாயமாக வெளியேற்றியது. இதுவே இலங்கை அரசியலின் விஷத்தன்மைக்கு முதல் அத்தியாயம்.

1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும் சட்டம்', தமிழ் சமூகத்தை இரண்டாம் தரக் குடிமக்களாக ஒதுக்குவதில் முக்கியப் பங்காற்றியது. தொடர்ந்து வந்த 1972 மற்றும் 1978ஆம் ஆண்டு அரசமைப்புகள், பௌத்த மதத்தை 'முதன்மையான', அரசினால் 'பாதுகாக்கப்படும்' அந்தஸ்துக்கு உயர்த்தி, மதப் படிநிலையை உறுதிப்படுத்தின. ஏனைய மதங்களுக்கு முறையான சலுகை இன்றி, சட்டரீதியான ஏற்றத்தாழ்வு நிலை நாட்டப்பட்டது. சிங்களப் பெரும்பான்மைத் தலைவர்களின் இந்தத் தொடர்ச்சியான இன–மத வெறியாட்டங்களே, பல தசாப்த கால உள்நாட்டுப் போருக்கு நெருப்பைக் கொழுத்தின.

"1993ஆம் ஆண்டு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, 'சிறுபான்மையினர், தங்களைப் பெரும்பான்மை சமூகமாகிய 'பெரிய மரத்தைச்' சுற்றியுள்ள 'கொடிகளாகவே' கருத வேண்டும்" என்று ஆணவத்துடன் அறிவித்து, சிங்கள பௌத்த மேலாதிக்க வெறியை உலகறியச் செய்தார்.

### சஜித் பிரேமதாஸவின் நயவஞ்சக அரசியல் நாடகம்

2009இல் போர் இராணுவ ரீதியில் முடிவுக்கு வந்தாலும், உண்மையான தேசிய ஒற்றுமைக்கான தேடல் இன்னும் ஒரு மாயைதான். இத்தகைய அபாயகரமான சூழலில்தான், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சமீபத்திய பேச்சுகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், இ.த.அ.க (ITAK) மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் போன்ற சிறுபான்மைச் சமூகங்களின் ஆதரவைப் பெற்ற சஜித், தற்போது நிறம் மாறியுள்ளார். அவரது சமீபத்திய கொள்கை முன்மொழிவு ஆழ்ந்த கவலையளிக்கிறது. பௌத்த சாசனத்துக்கு ஒரு முழு அமைச்சரவை அமைச்சு (Cabinet Ministry) அமைக்கப்பட வேண்டும் என்றும், அதே வேளையில் ஏனைய மதங்களுக்கு வெறும் கனிஷ்ட இராஜாங்க அமைச்சுகளை (Junior State Ministries) மட்டுமே ஒதுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

இந்த நகர்வு, தேர்தல் இலாபத்துக்காகச் சிங்களப் பெரும்பான்மையினரிடையே இன–மத உணர்வுகளைப் பயன்படுத்துவதற்கான அப்பட்டமான முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. இது, இலங்கையில் கடந்தகால ஸ்திரமின்மைக்கு வழிவகுத்த அதே பாரபட்சமான கொள்கை கட்டமைப்பைத் திரும்பவும் கொண்டு வரத் துணிகிறது.

சஜித் பிரேமதாஸ, தான் அணிந்திருக்கும் 'மக்களுக்கான' அரசியல் முகமூடியின் பின்னால், பௌத்தப் பேரினவாதத்தின் நச்சு விதையை விதைக்கத் துணிவது, மீண்டும் ஒரு சமூக அமைதியின்மைக்கு வழிவகுக்கலாம்.

### தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளுக்கு கூர்மையான கேள்விகள்!

சிறுபான்மை அரசியல் பங்குதாரர்கள் – குறிப்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் – ஒரு கடுமையான சுயபரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

சஜித் பிரேமதாஸவின் கொள்கை, தமிழ் பேசும் மக்களையும் பௌத்தர்கள் அல்லாத ஏனைய மதங்களையும் இரண்டாம் நிலை, தரம் தாழ்ந்த குடிமக்களாகக் கருதுவது அப்பட்டமாகத் தெரிகிறது.

மனோ கணேசன் அவர்களுக்கும், ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் தமிழ் பேசும் மக்கள் எழுப்பும் நேரடியான கேள்விகள்:–

சமத்துவம் அற்ற இலங்கையின் இரண்டாம் நிலை பிரஜைகளாகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் கருதுகிறீர்களா? ஆம் எனில், உங்கள் அரசியல் இருப்பின் நோக்கம் என்ன?

கருதாவிட்டால், சஜித் பிரேமதாஸவின் பௌத்தர்கள் அல்லாத மக்களைத் தரம் தாழ்த்தும் கோரிக்கைக்கு இதுவரை ஏன் எதிர்ப்பைக் காட்டவில்லை? உங்கள் அரசியல் எதிர்காலத்திற்காக, தமிழ் பேசும் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் சமத்துவ உரிமையைப் பலியிடத் துணிகிறீர்களா?

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை மறுக்கும், வரலாற்று ரீதியான பிளவுகளை மேலும் மோசமாக்கக்கூடிய அரசியல்வாதிகளுடன் அணிசேர்வது, ஓர் உண்மையான பன்மைத்துவ மற்றும் சமத்துவமான அரசை நோக்கிய கூட்டு முயற்சியை அச்சுறுத்துகிறது.

துருவப்படுத்தும் அரசியலுக்குத் திரும்புவதை தமிழ் பேசும் மற்றும் பௌத்தர்கள் அல்லாத மக்கள் புறக்கணிக்க வேண்டும். கொள்கை ரீதியான தீவிர அரசியல் விழிப்புணர்வு மட்டுமே புதிய சமூக அமைதியின்மைக்கு வழிவகுக்கும் பேராபத்தைத் தடுக்க உதவும்.

சிறுபான்மைத் தலைமைகள் தங்கள் சமூகத்தின் உரிமைகளுக்காகத் துணிந்து குரல் கொடுக்க வேண்டிய வரலாற்றுத் தருணம் இது.

# கடலட்டை பண்ணைகள் விடயத்தில் பெரும் ஊழல் இடம்பெற்று வருகிறது

## நா.வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு

"கடலட்டை பண்ணை விடயத்தில் பெரும் ஊழல் இடம்பெற்று வருகி றது. இந்த விடயத்துடன் தொடர்பு டைய அதிகாரிகள் லஞ்சம் பெற்று விட்டு அனுமதிகளை வழங்கி வரு கின்றனர்."

– இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாச உபதலைவர் நா.வர்ண குலசிங்கம் தெரிவித்தார்.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சனிக்கிழமை கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர், நாரா, நெக்ரா நிறுவன அதிகாரிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் கடலட்டை பண்ணைகள் தொடர்பில் நடத்திய கூட்டம் மீனவர்களது எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது.

கடலட்டை பண்ணை விடயத்தில் பெரும் ஊழல் இடம்பெற்று வருகிறது. தொடர்புடைய அதிகாரிகள் லஞ்சம் பெற்றுவிட்டு அனுமதிகளை வழங்கி வருகின்றனர்.

கடலட்டை பண்ணைக்கு எதிராக முன்னர் மீனவர்கள் போராட்டம் நடத் திய போது தற்போதைய கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரும் கலந்து




கொண்டு அதை தடுத்து நிறுத்த வேண் டும் என கூறி ஆதரவு வழங்கியிருந் தார்.

ஆனால் இன்று அமைச்சராக வந்த பின்னர் அன்னியச்செலவாணி கிடைக்கும் என்று காரணத்தை கூறி அட்டை பண்ணைகள் அமைப்பதை ஊக்குவித்துவருகிறார். பாரம்பரிய மீன் பிடி தொழிலை அழிக்கும் வகையில் கடலட்டை பண்ணைகளுக்கு அனு மதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு பின்னால் பெரும் ஊழல் முறைகேடு இடம்பெற்று வருகிறது. அதிகாரிகள் கையூட்டை பெற்றுக்கொண்டு இதற்கு துணைபோகின்றனர்.

கடலட்டை பண்ணை மற்றும் சுருக்கு வலை தொழில் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழிலை தடை செய்யவேண்டும் என்று வடக்கு மீனவர்களுடன் சேர்ந்து அன்று குரல்கொடுத்த சந்திரசேகர் இப்போது அமைச்சராக வந்த பின் னர் அதுக்கு மாறாக நடக்கிறார். இவர் அமைச்சரான பின்னர் தான் வடக்கில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நட வடிக்கை அதிகரித்துள்ளது.

வல்வெட்டித்துறைக்கு வந்த ஜனாதி பதி அநுரகுமார திஸாநயக்க கூட உள்ளூர் இழுவைமடி படகுகளை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதா கவும் தடை செய்யப்பட்ட தொழில்களை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தார். கடற் றொழில் அமைச்சராக இருக்கட்டும் ஜனாதி பதியாக இருக்கட்டும் எல்லோரும் வார்த் தைகளில் ஏமாற்றுகிறார்கள். தங்கள் அரசியலுக்காக எங்கள் பிரச்சினையில் குளிர்காய்கின்றனர்.


எமது வாக்குகளினால் தெரிவுசெய் யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களாகட்டும் அரசியல் வாதிகளாகட் டும் எவரும் மீனவர்களுக்காக குரல் கொடுப்பதில்லை. அவர்கள் எல்லோ ரும் மீனவர் சமுதாயத்தை கைவிட்டு விட்டனர். யாரும் எங்கள் பிரச்சினையில் உண்மையாக செயற்படுவதில்லை." – என்றார்.

# அரனின் மைந்தன் ஆலயம் இருப்பார்!

## (5ஆம் நாள்)



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.




கந்த புராணம் கலாசாரம் ஆனது
நொந்திடு மனத்துக்கு ஒளடதம் ஆனது
ஆலயந் தோறும் கந்தனின் புராணம்
படிப்பது என்பது பக்தியின் நிலையே

ஆறு நாள்களும் ஆறு முகனை
சோறு தண்ணி தவிர்தே நிற்பார்
வீர வேலன் வெற்றித் திருமகன்
பாதம் பணிந்து நோற்பார் விரதம்

இளையோர் முதியோர் யாவரும் இணைவார்
சளையா திருந்து விரதம் பிடிப்பார்
ஆறு நாளையும் பேறாய் எண்ணி
அரனின் மைந்தன் ஆலயம் இருப்பார் !




- கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா -
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# இலங்கையின் உள்ளகக் கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுவது தேச எழுச்சிக்கு உதவும்

## நம் நாட்டின் தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினம் இன்று

இலங்கையில் தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டு ஒக்டோபர் 26 ஆன இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் அமைச்சரவையின் ஒப்புதலுடன், 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்தத் தினம் அறிவிக்கப்பட்டது.

இந்த நாள், இலங்கையின் புகழ்பெற்ற பொறியியலாளரும், புத்தாக்கத் துறையின் முன்னோடியும், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (Sri Lanka Inventors Commission) முதல் ஆணையாளருமான கலாநிதி ஏ.என்.எஸ்.குலசிங்கவின் பிறந்தநாளை கௌரவிக்கும் விதமாகத் தெரிவு செய்யப்பட்டது.

உள்நாட்டுக் கண்டுபிடிப்பாளர்களின் பங்களிப்பை அங்கீரிப்பது, புத்தாக்கச் சிந்தனையை ஊக்குவிப்பதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதாகும்.

### இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் பங்கு:-

தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினக் கொண்டாட்டங்களை ஒருங்கிணைப்பதில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு முக்கியப் பங்காற்றுகிறது. இந்த ஆணைக்குழு, ஆண்டுதோறும் இந்தத் தினத்தை முன்னிட்டு "சஹசக் நிவவும்" என்ற சிங்கள தலைப்பிட்ட தேசிய கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கப் போட்டியை நடத்துகிறது. இந்தப் போட்டியில் பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், திறந்த பிரிவினர் மற்றும் வணிகமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்கள் எனப் பல பிரிவுகளின் கீழ் கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன.

வெற்றியாளர்களுக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் மற்றும் இலங்கையின் உயர் கண்டுபிடிப்பாளர் விருதான "தாசிஸ் விருது" உட்படப் பல கௌரவங்கள் வழங்கப்படுகின்றன.

### புத்தாக்கத்தை சமூகத்தில் வளர்க்கும் ஓர் இயக்கம்:-

இந்தத் தினத்தை முன்னிட்டு, இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு, சிறந்த கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களின் படைப்புகளை வணிகமயமாக்குவதற்குத் தேவையான நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றுத் தர முயற்சிகளை மேற்கொள்கிறது. மேலும், உள்நாட்டுக் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குச் சிறப்பு அடையாள அட்டைகளை வழங்குவது மற்றும் ஆற்றல் மேம்பாட்டுச் செயல் திட்டங்களை நடத்துவது போன்ற நடவடிக்கைகளையும் ஆணைக்குழு மேற்கொள்கிறது. இவை அனைத்தும் இளம் தலைமுறையினரிடையே அறிவியல் ஆர்வம் மற்றும் தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்த்து, இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுச் சேர்க்கின்றன.

### இலங்கையின் எழுச்சிக்குத் தேசிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவித்தல்:-

இலங்கையின் தேசிய எழுச்சிக்கு வித்திட, தேசிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பது மிகவும் இன்றியமையாததொரு கொள்கைத் தீர்மானமாகும்.

இந்த ஊக்குவிப்பானது வெறும் பொருளாதார வளர்ச்சியை மட்டும் குறிக்காமல், நாட்டின் சமூக, தொழில்நுட்ப மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கும்

தொடர்ச்சி▼




# இலங்கையின் உள்ளகக் கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படுவது தேச எழுச்சிக்கு உதவும்

## நம் நாட்டின் தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினம் இன்று

தொடர்ச்சி▲

அத்திவாரமாக அமைகிறது. உள்நாட்டுக் கண்டுபிடிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை வளர்ப்பதன் மூலம், இலங்கை உலக அரங்கில் ஒரு வலிமையான, தற்சார்புடைய நாடாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும்.

### பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி:-

கண்டுபிடிப்பாளர்கள் புதிய தயாரிப்புகளையும், செயல்முறைகளையும், சேவைகளையும் உருவாக்குகின்றனர். இது புதிய தொழில் முயற்சிகளின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கிறது. இந்த முயற்சிகள் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்புகளைப் பெருக்குகின்றன. மேலும், உள்ளூர் தேவைகளுக்கும், வளங்களுக்கும் ஏற்றவாறு உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள், இறக்குமதிச் செலவுகளைக் குறைத்து, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தற்சார்பை ஊக்குவிக்கின்றன. குறிப்பாக, புதுப்பிக்கத்தக்க சக்தி, விவசாய மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் சிறந்து விளங்குவது, நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை அதிகரிக்கும்.

### சமூக மற்றும் கல்விச் சீர்திருத்தம்:-

கண்டுபிடிப்புச் சூழலை உருவாக்குவது, கல்வி முறையில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டு வர உந்துசக்தியாக அமைகிறது. பாடத் திட்டங்கள் வெறும் மனப்பாடக் கல்வியை விட, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் மற்றும் விமர்சன ரீதியாகச் சிந்திக்கும் திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளும். மாணவர்களிடையே இளமையிலேயே ஆய்வுக்குரிய மனப்பான்மையையும், சவால்களை ஏற்றுக்கொள்ளும் தைரியத்தையும் விதைப்பதன் மூலம், எதிர்காலத் தலைமுறைக்குத் தேவையான ஆற்றல்மிக்க கண்டுபிடிப்பாளர்களை உருவாக்க முடியும். மேலும், சமூகத்தில் உள்ளூர் கண்டுபிடிப்புகளுக்குக் கிடைக்கும் அங்கீகாரம், இளையோர் மத்தியில் தன்னம்பிக்கையையும், நாட்டுப்பற்றையும் வளர்க்கிறது.

### வழிகள் மற்றும் சவால்கள்:-

தேசிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க, அரசு, தனியார் துறை மற்றும் கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டும். கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியுதவிகளை வழங்குதல், காப்புரிமைச் சட்டங்களைப் பலப்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்பாளர்களைச் சந்தையுடன் இணைக்கும் துரிதப்படுத்தல் மையங்களை நிறுவுதல் போன்ற கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். இருப்பினும், நிதிப் பற்றாக்குறை, சந்தை அணுகல் இல்லாமை மற்றும் முறையான வழிகாட்டலின்மை போன்ற சவால்களை எதிர்கொள்ள ஒரு தெளிவான தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கை, கண்டுபிடிப்பாளர்களைப் பாராட்டவும், அவர்களின் முயற்சிகளுக்குப் பாதுகாப்பளிக்கவும் உறுதிசெய்ய வேண்டும்.

இலங்கையின் தேச எழுச்சி என்பது, அதன் குடிமக்களின் உள்ளார்ந்த திறமைகளை அங்கீகரிப்பதிலும், வளர்ப்பதிலும் தங்கியுள்ளது. தேசிய கண்டுபிடிப்பாளர்களுக்கு உகந்த சூழலை வழங்குவதன் மூலம், இலங்கை ஒரு புத்தாக்கப் பொருளாதாரத்தை நோக்கி நகரும். இது, சர்வதேச சவால்களைச் சமாளிக்கவும், அதன் தனித்துவமான வளங்களைப் பயன்படுத்தி உலக அரங்கில் தனது பங்களிப்பை உறுதிப்படுத்தவும், இறுதியில் ஒரு நிலையான மற்றும் வளமான இலங்கையை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# மீற்றர் வட்டி, போதைப் பொருள் மாபியாவுக்கு எதிராக வவுனியாவில் தீவிர சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி கூறுகின்றார்



(கி.வசந்தன்)

வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப் பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு நேற்றுப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப் பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கலாம். அவ்வாறு வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், மக்களிடம் அதிகமான காசோலைகளை பெற்றுக் கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு மிரட்டப்பட்டு சொத்துக்களை இழந்தவர்களும் தொடர்பு கொள்ள முடியும்.

வன்னியின் பல பகுதிகளில் போலியான ஆவணங்கள் மற்றும் போலியான உறுதிகள் மூலம் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ஊடாகத் தகவல்கள் திரட்டப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளை மேற்கொள்ளபவர்கள் மற்றும் அச்செயற்பாடுகள் மூலம் சொத்து சேர்த்தவர்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகளை செய்ய முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் உரிய வகையில் விசாரணை நடத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – எனவும் தெரிவித்துள்ளார்.

# மாதத்தில் இரு தடவைகள் மக்களைச் சந்திக்க வன்னிப் பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை




(கி.வசந்தன்)

மாதத்தில் இரண்டு தடவைகள் மக்கள் சந்திப்பை மேற்கொள்ளத் தாம் தீர்மானித்துள்ளார் என வவுனியா – மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களின் குறைகளை இனங்கண்டு அதனை தீர்க்கும் பொருட்டு மாதத்தில் இரண்டு நாள்கள் "பொதுமக்கள் குறைதீர்" நாளாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது புதன் கிழமைகளில் பிரதி பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து பொது மக்கள் தமது பிரச்சி னைகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டத்தை நிலைநாட்டப் பொலிஸார் சட்டவிரோதமாக செயற்பட முடியாது

## கொடிகாமம் இளைஞன் மீதான சூடு குறித்து சிறிகாந்தா காட்டம்

சட்டத்தை நிலைநாட்டுகின்றோம் எனப் பொலிஸார் சட்டத்தின் எல்லைக்கு வெளியே சென்று சட்டவிரோதமாக செயற்பட முடியாது என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

கொடிகாமத்தில் இளைஞன் ஒருவர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், இளைஞன் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி சென்றார் என 18 வயதான டிராக்டர் சாரதி மீது பொலிஸார் கண் மூடித்த-னமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்-காண்டதில், அந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு ஒரு வரையறை உண்டு. அவர்கள் சட்டத்திற்கு கட்டுப்பட்டே சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும். சட்டத்தின் எல்லைகளைத் தாண்டி, சட்டவிரோதமான முறையில் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது.

சட்டவிரோதமான முறையில், மணலை ஏற்றி சென்றார் என்றால் அதனை நிறுத்தப் பொலிஸாருக்குப் பல வழிகள் உண்டு. இறுதியாக வாகன சில்லுகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இருக்கலாம். ஆனால் பொலிஸார் வாகனத்தின் சில்லுகளை இலக்கு வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளாது, கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

மனித உயிர்கள் பெறுமதியானவை.



அவற்றைக் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடுகள் நடத்திப் பறிக்க அனுமதிக்க முடியாது. எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் தேவை. அதற்குப் பொலிஸார் ஒத்துழைக்க வேண்டும். நீதியை மறைக்காது, விசாரணைகளுக்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.



# யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு ஆறு பேராசிரியர்கள் விண்ணப்பம் சமர்ப்பிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு ஆறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என அறிய வருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 24ஆம் திகதியுடன் நிறைவடைய வுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான இறுதித் தினம் ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆகும். அன்றைய தினம் பிற்பகல் 3 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் நிறைவடைந்த வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பீடாதிபதிகள் 4 பேர் உட்பட ஆறு பேராசிரியர்கள் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக வட்டாரங்களின் அடிப்படையில், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல் நம்பி, கலைப் பீடாதிபதி போராசிரியர் சி.ரகுராம், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், விஞ்ஞான பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் பு.ரவிராஜன், உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசியர் கு. மிகுந்தன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பிறின்ஸ் ஜெயதேவன் ஆகியோர் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என அறியமுடிகிறது.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய டிசெம்பர் மாத முற்பகுதியில் நடாத்தப்படவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலையில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார்.

# இந்திய மீனவர்களின் பிடிபட்ட படகுகளை ஆழ்கடலில் முழ்கடிக்கும் வேலை ஆரம்பம்

## அதற்கும் அவர்களின் படகுகளே பயன்படுத்தப்படுகின்றன

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களிடம் இருந்து கடற்படையினரால் பிடிக்கப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட நிலையில் மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் படகுகள் கடற்படையினரால் நடுக் கடலிற்கு இழுத்துச் சென்று கடலில் மூழ்கடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு, மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்தியப் படகுகளை அங்கிருந்து அகற்றும் நோக்கில் பைக்கோ இயந்திரம் மூலம் வெளியே எடுக்க முயற்சிக்கப்பட்டது. 3 தினங்கள் முழுமையாக முயற்சிக்கப்பட்டு 5 படகுகளே நொறுங்கிய நிலையிலேயே மீட்கப்பட்டன. இவ்வாறு நொறுங்கிய நிலையில் படகுகளை வெளியே எடுக்கும் பணிக்காக பயன் படுத்திய பைக்கோ இயந்திரத்திற்கு மணித்தியாலத்திற்கு 18 ஆயிரம் ரூபா வீதம் செலவு ஏற்படுகின்றமையால் அந்த முயற்சி கை விடப்பட்டது.

இதனையடுத்து மயிலிட்டியில் நிற்கும் இந்தியப் படகுகளை கடற்படையினர் மூலம் நடுக் கடலுக்கு இழுத்துச் சென்று மூழ்கடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்திய படகுகளை இழுத்துச் செல்லும் பணியை கடற்படையினர் இரு படகுகளின் துணைகொண்டு ஆரம்பித்துள்ளனர். நேற்று மாலை முதல் இடம்பெறும் இப் பணியில் இதுவரை மூன்று படகுகள் கடலிற்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தப் பணிக்காக கடற்படையினர் பயன்படுத்தும் இரு படகுகளும் இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்டு கடற்படையினரின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட படகுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# நானாட்டானில் மாடுகளை திருடிய மூவர் கையும் களவுமாக நேற்றுப் பிடிபட்டனர்

(மன்னார் நிருபர்)

மன்னார் –நானாட்டான் பிரதேசத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை இராண்டு மாடுகளை திருடிய மூன்று நபர்களை அப்பகுதியை சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நானாட்டான் பிரதேசத்தின் உமநகரி வீதியில் நேற்று இரவு மாடுகளை கொண்டு செல்வதற்காக சந்தேகிக்கும் வகையில் ஓட்டோவில் சுற்றித்திரிந்த மூவர் அப்பகுதி இளைஞர்கள் சிலரை பார்த்தவுடன் தப்பி ஓடியுள்ளனர் .

கிராமத்து இளைஞர்கள் அவர்களை துரத்திச் சென்று மன்னார் தள்ளாடி பெரிய பாலத்தடியில் பிடித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் நபர்கள் மன்னார் நகரப் பகுதியில் சாவற்கட்டு மற்றும் சாந்திபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது

திருடப்பட்ட மாடுகள் கட்டைக்காடு மற்றும் மற்றும் உமநகரி கிராமங்களை சேர்ந்த உரிமையாளர்கள் உடையவை எனத் தெரிய வந்துள்ளது. இரு மாடுகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.



சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக முருங்கன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

நானாட்டான் பிரதேசத்தில் மேய்ச்சல் நிலம் இல்லாத நிலையிலும் பாரிய சிரமப் பட்டு வளர்க்கும் கால்நடைகள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.





# சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் மணற்காட்டில் அறுநூறு ஏக்கர் காணிகளை அபகரிப்பதற்கு முயற்சி!

## கைவிடுமாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் 600 ஏக்கர் காணிகளை அபகரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியைக் கைவிடுமாறு மணக்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதியில் கற்கோவளத்திற்கும் மணற்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் முந்நூறு ஏக்கர் காணியும், மணற்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பகுதியில் முந்நூறு ஏக்கர் காணியும் சுற்றுலா தேவைகளுக்காக அபகரிப்பு நடவடிக்கைகள் இடம் பெற உள்ளன.

இதனை உடனடியாக கைவிடுமாறு மணற்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் மணற்காடு கிராம மட்ட அமைப்புகள் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மணற்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்கு குடியிருக்க காணியில்லாத நிலையில், தனியாருக்கு இவ்வாறு காணிகளை வழங்கும் முயற்சி ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் இதனை தாங்கள் கடுமையாக எதிர்க்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சம்பந்தப்பட்ட தரப்புகள் உரிய கவனமெடுத்து இந்த அறுநூறு ஏக்கர் காணிகள் பொறுப்பேற்கும் நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# தாய்லாந்தில் இடம்பெறும் கூடைப்பந்துப் போட்டியில் மட்டு. சென் மைக்கல் கல்லூரி அணி பங்குபற்றுகிறது

(கனகராசா சரவணன்)

தாய்லாந்து பாங்கொக் நகரில் நடைபெறும் சர்வதேச கூடைப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றுவதற்காக் மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தாய்லாந்துக்கு பயணித்தனர்

தாய்லாந்தில் 24 முதல் 27 வரை இலங்கை, பூட்டான், மாலைதீவு, தாய்லாந்து ஆகிய 4 நாடுகளைச் சேர்ந்த 17 வயதுக்கு உட்பட்டவர்கள் பங்குபற்றும் இந்த சர்வதேச கூடைபந்தாட்ட போட்டி இடம்பெறவுள்ளது.

இந்த போட்டியில் பங்குபற்றுவதற்கு இலங்கையில் இருந்து மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி அணி, கொழும்பு ஆனந்தா கல்லூரி அணி ஆகிய இரு அணிகளும் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரி அணியினர் தாய்லாந்துக்கு நேற்று முன்தினம் இரவு விமானத்தில் புறப்பட்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# முன்னுக்குப் பின் முரணாகக் கூறி ஏமாற்றுவதுதான் அரசின் 'சிஸ்டம் சேஞ்' என்ற முறைமை மாற்றமா?

## 39 ஆவது நாளாகப் போராடும் முத்து நகர் விவசாயிகள் கேள்வி

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் நேற்று சனிக்கிழமை 39 ஆவது நாளாகத் தமது தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை திருமலை மாவட்டச் செயலகம் முன்பாக நடத்தி வருகின்றனர்.

தங்களது விவசாய காணிகள் சூரிய மின் சக்தி உற்பத்திக்காகத் தனியார் கம்பனிகளுக்கு அடாத்தாக வழங்கப்பட்டமையை அடுத்து அன்றாட ஜீவனோபாயத்தை இழந்த நிலையில் அவர்கள் போராடி வருகின்றனர்.

“இங்குள்ள பிரதியமைச்சர் ஒருவர் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை கூறி விவசாயிகளை ஏமாற்றி வருகின்றார். விவசாய நீர்ப்பாசன குளங்களை அழித்தும் பொய்களை கூறி வருவதுதானா இவர்களின் “சிஸ்டம் சேஞ்” எனவும் போராட்டக்காரர்கள் நேற்று சீற்றத்துடன் கேள்வி எழுப்பினர்.











# மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் நேற்று விழிப்புணர்வு அமைதிப் போராட்டம்

மஸ்கெலியா பிரதேச வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் பாஹிமா தலைமையில் அங்கு பணி புரியும் அனைத்து உத்தியோ கத்தர்களும் இணைந்து நேற்று சுமார் 30 நிமிடங்கள் அமைதி போராட்டம் நடத்தினர்.

இவ்வைத்தியசாலைக்குவரும்நோயா ளர்களினால் முதலுதவி மற்றும் சிகிச்சை அளிக்கும் போது, வைத்திய சாலையில் உள்ள வைத்திய அதிகாரி கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழி யர்கள் அனைவருக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள், சிக்கல்கள், கொலை மிரட்டல்கள் மற்றும் தாக்குதல் போன் றவற்றை ஆட்சேபித்தும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த அறவழிப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி நோயாளி ஒருவர் சுகவீனம் காரணமாக வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அவ ருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் போது, அவரது படுக்கைக்கு அடுத்த படுக்கையில் இருந்த நோயாளி, முன் னையவரின் சிகிச்சை முடிந்த பிறகு, தமக்கு சிகிச்சை அளித்தார் என்ற சீற் றத்தில் உத்தியோகத்தரை தாக்கி யமையுடன் கொலை மிரட்டல் விடுத் தார் என்றும் கூறப்படுகின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான பல நிகழ்வுகள் இடம் பெற்றமையை எதிர்த்தும் இந்த அறவழி போராட்டம் ஒரு முன்னுதார ணமாக அமைந்தது எனப் போராட்டத் தில் ஈடுபட்ட மாவட்ட வைத்திய அதிகாரி, ஏனைய வைத்தியர்கள் மற்றும் தாதிகள், உத்தியோகத்தர்கள் கூறினார்கள்.

மேலும் இச் சம்பவம் குறித்து நேற்று முன்தினம் மஸ்கெலியா பொலிஸ் நிலை யத்தில் பாதிக்கப்பட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து உள்ளார்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உடன் நடவ டிக்கை எடுத்து சந்தேக நபரை நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

மஸ்கெலியா டி-சைட் தோட்டத் தைச் சேர்ந்த சந்தேகநபர் நேற்று ஹட் டன் நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட விருந்தார்.

இதற்கிடையில், சமீபத்தில் டயகம பிரதேச வைத்தியசாலையிலும் இதே போன்ற தாக்குதல் சம்பவம் இடம்பெற்றி ருந்தது. அந்த சம்பவத்தையடுத்து அங்கிருந்த வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பல நாள்கள் சேவை யில் இருந்து விலகியிருந்த நிலை யில், நேற்று முன்தினம் அங்கு அன் றாட சேவைகள் மீண்டும் ஆரம்பிக் கப்பட்டன.







# நீர்கொழும்பு ஹொரண பிரதேசத்திலும் நேற்று 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

**(உடப்பு க.மகாதேவன்)**

நீர்கொழும்பு ஹொரண பிரதேசத்திலும் நேற்று ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், கார், ஹயஸ் வான், லொறி மற்றும் சிறிய வான் ஆகியனவே மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்குப் படுகாயம் ஏற்பட்டதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியிலும் நேற்றுக் காலை ஐந்து வாகனங்கள் இன்றுடன் ஒன்று மோதிய பாரிய விபத்துச் சம்பவம் இடம்பெற்றமை தெரிந்ததே.

# கிழக்கு மாகாணத்தில் ஆயுள்வேதத் திணைக்களத்தின் வைத்திய அத்தியட்சகர் பதவி நியமனத்துக்குத் தடை!

## கல்முனை மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் விதித்தது







**(பாறுக் ஷிஹான்)**

கிழக்கு மாகாணம் ஆயுள் வேதத் திணைக்களத்தினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ள ஆயுள் வேத வைத்தியசாலைகளுக்கான வைத்திய அத்தியட்சகர் பதவி நியமன விடயத்திற்கு தடை உத்தரவை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன் பிறப்பித்துள்ளார்.


சம்பந்தப்பட்ட தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை மற்றும் நியமனத்தால் தாம் பாதிக்கப்பட்டுளார் எனத் தெரிவித்து வாதியான வைத்தியர் ஒருவர் தாக்கல் செய்த ரிட் மனுவை நேற்று முன்தினம் பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

இம்மனுவில் கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட 14 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நவம்பர் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக அழைப்பாணை விடுக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை செவிமடுத்த நீதிபதி மனுவை விசாரணைக்கு ஏற்று கொண்டமையுடன் ஆயுள் வேத வைத்தியசாலைகளுக்கான வைத்திய அத்தியட்சகர் பதவி நியமனத்தினை இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த 12.08.2025 ஆயுள் வேத திணைக்களத்தினால் வைத்திய அத்தியட்சகரை தெரிவு செய்வதற்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டிருந்தது. இதன்போது வழங்கப்பட்ட புள்ளிகள் விடயத்திலும் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



# மோந்தா புயல் தாக்கம்: தமிழகத்தில் கனமழை!

வங்கக் கடலில் உருவாகும் தீவிர புயலான 'மோந்தா' 28ஆம் திகதி ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே கரையை கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கமாக சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று சென்னையிலிருந்து கிழக்கு - தென்கிழக்கே 970 கிலோ மீற்றர் தொலைவிலும், காக்கிநாடாவிலிருந்து தென்கிழக்கே 990 கிலோ மீற்றர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளது.

இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 27 ஆம் திகதி காலை, தென்மேற்கு மற்றும் அதனை அண்மித்த மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் புயலாகவும் வலுவடையும். பின்னர் வடமேற்கு திசையில் நகர்ந்து, 28 ஆம் திகதி வாக்கில் தீவிரப் புயலாக வலுப்பெறக்கூடும்.

அதனைத் தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திர கடலோரப் பகுதிகளில், மசூலிப்பட்டினம் - கலிங்கப்பட்டினத்துக்கு இடையே காக்கிநாடாவுக்கு அருகில் தீவிரப் புயலாக 28 ஆம் திகதி மாலை அல்லது இரவில் கடக்கக்கூடும். அந்த நேரத்தில், காற்றின் வேகம் மணிக்கு 90 முதல் 100 கிலோ மீற்றர் வேகத்திலும், இடையிடையே 110 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும்.

இதன் காரணமாக இன்று முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கரூரில் உயிரிழந்தோர் குடும்பத்தினரை மாமல்லபுரத்தில் விஜய் சந்திக்க ஏற்பாடு



கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை விஜய் திங்கள் கிழமை தனித்தனியாக சந்திக்கிறார். மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் இதற்கான ஏற்பாடுகளை த.வெ.க. நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

முன்னதாக, கரூரில் உள்ள மண்டபத்தில், பாதிக்கப்பட்டோரை வரவழைத்து அவர்களை சந்திக்க விஜய் திட்டமிட்டார். இதற்காக, கரூரில் மண்டபங்கள் பார்க்கப்பட்டது. ஆனால், விஜய்யின் சந்திப்புக்கு கரூரில் மண்டபங்கள் கிடைக்க சிக்கல் நீடித்ததால், உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்து சந்திக்க முடிவு செய்துள்ளார்.

இதற்காக, பாதிக்கப்பட்டோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு த.வெ.க. நிர்வாகிகள் பேசியுள்ளனர். முதலில் சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு அவர்களை அழைத்து வந்து சந்திக்க திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது அந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் 41 பேரின் குடும்பத்தினரை சந்திக்க விஜய் முடிவு செய்துள்ளதாக த.வெ.க. நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

மாமல்லபுரம் போர் பாயின்ட் தனியார் விடுதியில் சந்திப்பு நிகழ்ச்சி நாளை காலை நடைபெறுகிறது. இதற்காக, 41 பேரின் குடும்பத்தினரையும் மாவட்ட நிர்வாகிகள் மாமல்லபுரத்துக்கு அழைத்து வருகின்றனர். இதற்கான செலவுகள் அனைத்தையும் த.வெ.க. ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்களை தங்க வைப்பதற்காக, அந்த ஹோட்டலில் 50 இற்கும் மேற்பட்ட அறைகளும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன என நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு, பாதிக்கப்பட்டவர்களை விஜய் தனித்தனியாக சந்தித்து, அவர்களுடன் பேச இருக்கிறார். கடந்த மாதம் 27 ஆம் திகதி த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த நிலையில், இந்த மாதம் அதே நாளில் அவர்களது குடும்பத்தினரை விஜய் சந்திக்க இருப்பது கவனிக்கத்தக்கது.

# ஒசாமா பின்லேடன் பெண் வேடமிட்டு ஆப்கனிஸ்தானில் இருந்து தப்பினார்

## அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் அதிகாரி தகவல்



ஆப்கனிஸ்தானின் டோரா போரா மலைப் பகுதியில் ஒசாமா பின்லேடன் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் அவர் பெண் வேடமணிந்து தப்பினார் என அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் அதிகாரி ஜோன் கிரியாகோ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அல் கொய்தா அமைப்பின் 19 பயங்கரவாதிகள், 4 வர்த்தக விமானங்களைக் கடத்தினர்.

அதில், இரண்டு விமானங்கள் மூலம் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையம் அமைந்திருந்த இரட்டை கோபுரம் என வர்ணிக்கப்பட்ட இரண்டு மிக உயரமான கட்டடங்களைத் தாக்கி அழித்தனர்.

மூன்றாவது விமானத்தின் மூலம் அமெரிக்காவின் விர்ஜினியாவில் உள்ள பாதுகாப்புத் துறை தலைமை அலுவலகமான பெண்டகன் மீது தாக்குதல் நடத்தினர்.

மற்றொரு விமானம் பென்சில்வேனியாவில் விளை நிலத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அமெரிக்கா தீவிர வேட்டையில் களமிறங்கியது.

அப்போது ஆப்கனிஸ்தானில் இருந்த ஒசாமா பின்லேடன் பின்னர் அங்கிருந்து தப்பி பாகிஸ்தானுக்குள் நுழைந்து அங்கு தலைமறைவகியிருந்தார்.

பாகிஸ்தானின் அப்போடாபாத் நகரில் தலைமறைவாகி இருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்கப் படை கடந்த 2011 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி சுட்டுக்கொன்றது.

இந்நிலையில், ஒசாமா பின்லேடன் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே கொல்லப்பட்டிருக்க வேண்டியவர் என்றும் அவர் பெண் வேடமிட்டு ஆப்கனிஸ்தானின் டோரா போரா மலைப் பகுதியில் இருந்து தப்பிவிட்டார் என்றும் அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் அதிகாரி ஜான் கிரியாகோ தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய எரிசக்தி தடைகளை தீவிரப்படுத்த உக்ரைன் ஜனாதிபதி வலியுறுத்துகின்றார்




ரஷ்ய எரிசக்தி துறை மீதான தடைகளை விரிவுப்படுத்த வேண்டும் என அமெரிக்காவிடம் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொள்ள நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா இணக்கம் தெரிவிக்காதமையால், அந்த நாட்டின் இரண்டு பெரிய மசகு எண்ணெய் நிறுவனங்கள் மீதும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பொருளாதாரத் தடையை அறிவித்துள்ளார்.

ரஷ்ய அரசுக்கான மிகப்பெரிய வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் இந்த நிறுவனங்கள் மீதான தடைக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், ரஷ்யா உடனான போரில் ஆதரவை பெறுவதற்காக, 20 இற்கும் மேற்பட்ட ஐரோப்பிய தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்துவதற்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி லண்டன் சென்றுள்ளார்.

இதன்போது, ரோஸ்நெப்ட் மற்றும் லுகோயில் மீது மட்டுமல்லாது அனைத்து ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ரஷ்ய எரிசக்தி துறை மீதான தடைகளை விரிவுப்படுத்த வேண்டும் என்றும் அவர் அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, ரஷ்ய எண்ணெய் நிறுவனங்களை குறி வைத்து உக்ரைன், ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் ஏவி தாக்குதல் நடத்தி வருவதால் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை வழங்குமாறு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கோரியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2025



## மேஷம்

இன்று கோவில் சென்று சம்பிரதாய முறைப்படி வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். இதன்மூலம் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தள்ளிப் போடவும்.

இன்று பணிகள் அதிகமாகக் காணப்படும் முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் சிறப்பாக பணிகளைக் கையாளலாம்.

உங்கள் துணையிடம் இன்று தகவல் பரிமாற்ற சிக்கல் காணப்படும். அனுசரித்து புரிந்து கொள்வதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.



## ரிஷபம்

இன்று மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமற்ற மன நிலையும் வேதனையும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் சில சவால்கள் நிறைந்திருக்கும். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் செயல்திறன் சிறப்பான நிலையில் இருக்கும்.

உங்கள் பதற்றமான மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



## மிதுனம்

இன்று வருத்தங்களை ஒதுக்கித் தள்ளுங்கள் அமைதியாக இருக்க வேண்டும். வெற்றிக்கான முயற்சியை எடுக்கவேண்டும்.

உங்கள் செயல்திறனில் அதிருப்தி காணப்படும். அதிகப் பணிகளைக் கையாள முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். சேமிப்பது கடினமாகக் காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.



## கடகம்

இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள். இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும் முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடுகளை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்



## சிம்மம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவாகும்.

தோல் சம்பந்தமான பிரச்சினை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதைத் தவிர்க்கவும்.



## கன்னி

இன்று பதற்றப்படாமல் சமநிலையோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிக பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்துகொள்வதில் மும்முரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.



## துலாம்

இன்றைய சூழ் நிலையில் நீங்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தியானம் சிறந்த பலனைத் தரும். நம்பிக்கை அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

அதிக பணிகள் காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முறையாகத் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான போக்கு சிறந்த பயன் அளிக்கும்.



## விருச்சிகம்

வெற்றிகளைப் பெற்றுத் தரக்கூடிய உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக இருக்கும் காரணத்தால் நீங்கள் பயனுள்ள முதலீடு செய்ய நினைப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2025




இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம். உங்கள் முன்னேற்றத் திற்காக நேரம் செலவு செய்வீர்கள். உங்கள் மென்மையான பேச்சு உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் நல்ல பலனளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணம் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான சூழல் காணப்படும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் அன்பும் பெருகும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். சிறிய கடன் வகையில் இன்று பணம் பெறுவீர்கள்.




இன்று கவலையுடன் காணப்படு வீர்கள். அதனால் உங்களால் சிறப் பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத் துக்கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாகப் பணியாற்ற இயலாது. முறை யாகத் திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று நிதி நிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்து மூலம் குணமாகும்.




இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள். இது உங்கள் கடின உழைப்பின் மூலம் சாத்தியம் ஆகும்.

உங்கள் பணியாற்றும் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல் லுறவு காணப்படும்.

உங்கள் துணையுடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். இதனால் உங்களுக்கு மனதிருப்தி ஏற்படும். உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிட்டும்.

எதிர்பாராத பணவரவு காணப்படும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியா னம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப் பாக்கலாம்.




உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக் கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுதி காரணமாக நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கைக் கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்க லாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாகக் காணப்படும். சேமிப் பும் அதிகமாகக் காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.



# இலங்கைக்கு தெற்கே நடுக்கடலில் சிக்கிய கப்பல் 14 பணியாளர்களை மீட்டது இலங்கைக் கடற்படை

இலங்கைக்கு தெற்கே உள்ள கடற் பகுதியில், தொழில்நுட்பக் கோளாறால் நடுக்கடலில் சிக்கிய வர்த்தக கப்பலின் 14 பணியாளர்களை இலங்கை கடற்படை மீட்டுள்ளது.

வியட்நாமில் இருந்து எகிப்து நோக் கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆஏ ஐவேநுபுசுஐவுலு ளுவுயுசு என்ற இந்த வர்த்தகக் கப்பலில், இலங்கைக்கு தெற்கே சுமார் 100 கடல் மைல் தொலைவில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பில் இலங்கை கடற் படைக்கு கிடைத்த தகவலின் அடிப் படையில், கப்பலின் பணியாளர்களை மீட்பதற்காக இலங்கை கடற்படையின் கப்பலொன்று அனுப்பப்பட்டது.

அதன்படி, ஆபத்தில் சிக்கிய கப்ப லில் இருந்த இந்திய, துருக்கிய மற்றும் அஸர்பைஜான் நாட்டவர்களைக் கொண்ட 14 பேர் அடங்கிய குழுவினரை பாதுகாப்பாக மீட்க முடிந்ததாக கடற்படை தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட அந்தக் குழுவினர் தற் போது அம்பாந்தோட்டை துறைமுகத் துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என கடற்படை தெரிவித்துள்ளது.